பர்மாவில்

# சோழர் ஜெயஸ்தம்பம்

1223/98



V241 C'E
N37
217134

அணா இரண்டு

1937

பர்மாவில்

# சோழர் ஜெயஸ்தம்பம்

ஊத்தெட்டின், ஊப்போச்சா,

திரு. நீலகண்ட சாஸ்திரியார் கட்டுரைகள்.

*Publisher:-*

**C. NAGIAH**

வேதம் அண் கோ.,

89. மோகல் வீதி, இரங்கூன்.

1937

# முன்னுரை

"பர்மாவில் சோழர் ஜெய ஸ்தம்பம்" என்னும் பெயரால், நான் இச் சிறிய நூலைப் புத்தக வடிவமாய் வெளியிட்டுள்ளேன். இதற்குக் காரணம் என்னவென்பதை, வாசகர்களாகிய உங்களுக்கு, நான் விளக்கிக் கூறித்தான் தெரிய வேண்டுமென்பதல்ல. பெகுவில் இரண்டு ஜெய ஸ்தம்பங்களிருப்பதைத் தமிழ் மக்கள் நன்கறிந்ததே. அவைகளிரண்டும் சோழரின் வெற்றியைக் குறிக்கும் சின்னங்களாகுமெனக் கூறப்பட்டது. 1908 ஆம் ஆண்டில் அவைகளை அரசாங்கத்தார் ஊருக்கு வெளியே கண்டெடுத்தார்கள். பின்னர், சிலாசாஸன அதிகாரி டோஸெய்ன்கோ செப்புத் தகடு ஒன்றை அவற்றின் மத்தியில் இணைத்து வைத்தார். அவர், அதில், "கி. பி. 1025-1027-ஆம் ஆண்டுகளில் முதலாம் இராஜேந்திர சோழர் கடாரம் அல்லது பெகுவை ஜெயித்தார். அவர், தமது வெற்றியைக் குறிக்கும் அடையாளமாக இந்த ஸ்தம்பங்களை நாட்டினர்" என்ற விபரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. டோஸெய்ன்கோ பிறப்பிலே சீனர். அவரது சாஸனம் ஏற்பட்டு, சுமார் இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலிருக்கலாம். ஆனல், பர்மா பிரிவினையான பனிரண்டாவது நாளிலே, அவரது சாஸனம் அகற்றப்பட்டு விட்டது. இச் செய்தி கேட்ட தமிழ் மக்கள் உணர்வு கொண்டனர். இந் நாட்டுத் தமிழ்ப் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்கின்றன. சில சங்கங்கள் முனைந்து வேலை செய்கின்றன. டோஸெய்ன்கோ சாஸனம் தவருனது, எனச் சொல்லப்படு

கிறது. ஆட்சேபத்துக்கு பர்மியர்கள் எடுத்துக் காட்டும் ஆதாரங்கள் எத்தகையவைகளென்பதையும் அவைகள் சரித்திரம் சம்பந்தமானவைகளா வென்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவே, பர்மிய அன்பர்கள் கண்ட ஆதாரங்களையும், திரு, நீலகண்ட சாஸ்திரியாரின் சரித்திரக் கட்டுரை யையும் தொகுத்து, இச் சிறு நூலாக வெளியிடத் துணிந்தேன். பர்மியர்கள் எடுத்துக் காட்டும் ஆதாரங் களைப் பரிசீலனை செய்யவும், சரித்திர ஆராய்ச்சித் துறையில் முனைந்து வேலை செய்யவும் இப் புத்தகம் துணைபுரியுமென எண்ணுகிறேன். எனவே, நான், இதைத் தமிழகத்தின் ஆராய்ச்சி மேடைக்குத் தாழ் மையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

அம்சாவதி,
1—11—37

சி. நாகையா.



ஊத்தெட்டின்

# இந்தியர் ஜெயிக்கவில்லை

## நான் கண்ட உண்மை

### தேசீய சர்வ கலாசாலை சரித்திரத்துறை சங்கத் தலைவர் ஊத்தெட்டின்

பெகு அரசாங்கப் பாடசாலையில், நான் ஆறாம் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தேன். 1918ஆம் ஆண்டு மாதம் டிசம்பர். ஒரு பகற்பொழுதில் நீதி மன்றக் கட்டிட வளைவுக்குள் நிறுத்தப்பட்டுள்ள ஜெய ஸ்தம்பங்கள் இரண்டையும் போய்ப் பார்த்தேன். அவ்விரண்டு ஸ்தம்பங்களுக்கு மத்தியில் இணைக்கப்பெற்ற தகட்டில், கீழே தந்துள்ள விபரங்கள் ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருந்தன.

> "கி. பி. 1025—1927 ஆம் ஆண்டுகளில் முதலாம் இராஜேந்திர சோழர், தென்னிந்தியாவிலிருந்து வந்து கடாரம் அல்லது பெகுவை யெதிர்த்தார். வெளி நாட்டிலே அவர் கொண்ட வெற்றியின் சின்னமாக இந்தியர் சம்பிரதாயப்படி இந்த ஜெய ஸ்தம்பங்களை நாட்டியுள்ளார். ஊருக்கு வெளியில் இவை கண்டெடுக்கப்பட்டு, 1908ஆம் ஆண்டில் அரசாங்கத்தாரால் இவ்விடத்தில் வைக்கப் பெற்றன.

இராஜாதிராஜ மன்னரது சரித்திரத்தை யெடுத்துக் கொண்டால், பெகுவை இந்தியர்கள் ஜெயித்ததாகச் சொல்வதற்கு அர்த்தமேயில்லை. இது, எனது அப்போதைய அபிப்பிராயமாகும். இதைப்பற்றிய எனது அபிப்பிராயத்தை உபாத்தியாயரிடம் தெரிவித்தேன்.

அதற்கு அவர், சிலாசாஸன அதிகாரி மிஸ்டர் டோ ஸெய்ன்க்கோ, தகட்டில் எழுதியிருப்பது தவருயிருக்க முடியாதென்றும் என்னைப் பார்க்கிலும் அவர் சரித் திரத்துறையில் மிக்க அனுபவமுள் ள வ ரெ ன் று ம் சொல்லிவிட்டார். வயதில் இளைஞன் என்ற காரணத் தாலும் உயர்ந்த படிப்பை யடையாதிருப்பதை யுத்தே சித்தும் நான் தொடர்ந்து விவாதம் செய்யவில்லை. மௌனம் சாதித்துக் கொண்டேன்.

## ஹந்தாவடி ரிக்கார்டு

1920ஆம் ஆண்டில் பெகுவை விட்டு அயலூருக் குச் சென்றேன். சுமார் பதின்மூன்ருண்டுகள் வரை யிலும் பெகு ஜெய ஸ்தம்பங்களைப்பற்றிய ஞாபகம் அறவே எனக்கில்லாதிருந்தது. ஒரு காரியார்த்தமாய் இரங்கூனிலிருந்து பெகுவைத் திரும்பவும் அடைந் தேன். இது 1932ஆம் ஆண்டில் ஆகும். நீதி மன் றத்தைச் சமீபித்தபோது, 'புகையும் நெருப்பில் காற் றடித்தாற்போல' எனது இருதயத்தில் முன்னே மறை ந்திருந்த எண்ணமும் உணர்வும் வேலைசெய்ய ஆரம் பித்துவிட்டன. மிஸ்டர் டோஸெய்ன்க்கோவின் சாஸ னத்தை அப்புறப் படுத்துவதற்காக மூன்ருண்டுகள் வரை ஆராய்ச்சித் துறையிலிறங்கிப் பெரிதும் பிர யாசைப்பட்டேன். எனது விடா முயற்சியால் போ திய ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. பெகுவை இர்ாஜேந்திர சோழர் ஜெயிக்கவில்லை. என்னும் முடி வைக் கட்டுரை மூலம் வெளியிடலாமென எண்ணி னேன். சில சொந்தக் காரணங்களை முன்னிட்டு என் ஞல் அவ்விதம் செய்யக்கூடாமல் போயிற்று. 1936ஆம் ஆண்டு டிசப்பரிலிருந்து "ஸன்" மாத சஞ்சிகையில் "ஹந்தாவடி ரிக்கார்டு" (அம்சாவதி குறிப்பு) என்னும் தலைப்பின் கீழ் எனது ஆராய்ச்சிக் கட்டுரையைத் தொ டர்ச்சியாய் வெளியிடலானேன். ஜனவரி மாத சஞ்சி கையில் ஆராய்ச்சியாலேற்பட்ட முடிவைச் சுருக்கமாக எழுதியுள்ளேன். நமது நாட்டார் சரித்திரத்தில் அபி

விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு, எனது ஆராய்ச்சியாலேற்பட்டுள்ள சரித்திரக் குறிப்புகளை இதன் கீழ் குறிப்பிடுகிறேன்.

## முதலாம் இராஜேந்திர சோழர்

பெகுவை முதலாம் இராஜேந்திர சோழர் ஜெயித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆதலால், அவருடைய சரிதையையும் அவரால் நாடு பெருக்கப்பட்ட வரலாறுகளையும் முதலில் ஆராய்ச்சி செய்யவேண்டியவனாயிருந்தேன். அவர் 1012ஆம் ஆண்டில் சோழ தேசத்தை ஆண்டு வந்தார். E. I. IX சோழ மூவேந்தவேழன், கராகண் ராமன் என்னும் சேனைத்தலைவர்களிருவருடன் அவர் சென்று இலங்கைத் தீவு, கடாரம் முதலிய நாடுகளை ஜெயித்தார். (S. I. I.,) (N. I. S., LIII) (E. I. IX) 1044ம் ஆண்டில் அவர் காலமானார். (A. R. E. 1916)

## எப்பொழுது, எவ்விதம் ஜெயித்தார்?

அவர் கடாரத்தை யெவ்விதம் கைக்கொண்டார் என்பதைப்பற்றி ஆராய்ந்தேன். 1031ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட தஞ்சாவூர் சாஸனத்திலும், 1030 ஆம் ஆண்டில் தீட்டப்பட்ட திருக்களார் செப்பேட்டிலும் அவர் ஜெயித்த விபரங்களிருக்கின்றன. அவ்விரண்டு சாஸனங்களிலும் வசனங்கள் மட்டும் சிறிது வித்தியாசப்படுகின்றன. ஆனால், ஜெயித்த நாடுகளைப்பற்றிய வரையிலும் இரண்டு சாஸனங்களும் ஒத்திருக்கின்றன. தஞ்சாவூர் சாஸனம் அரைகுறையானது. முழு விபரங்களடங்கிய திருக்களார் சாஸனத்திலிருந்து நமக்கு வேண்டியவைகளை மட்டும் இதன்கீழ் குறிப்பிடுகிறேன்.

## தமிழ் செப்பேடு சாஸனம்

“ஸ்வஸ்திக் ஸ்ரீ திருமன்னி என்னும் பீடிகையுடன் பரகேசரி வர்மன் உடையார் ராஜேந்திர சோழ தேவர் தமது வீரப்படைகளைக் கொண்டு கீழ்க்கண்ட

ஊர்களைப் போரில் ஜெயித்தார்'' என்று தமிழ் செப் பேட்டில் சொல்லப் பட்டிருக்கிறது. அதில், முதலாவ தாக, இந்தியாவில் அவர் ஜெயித்த நாடுகளைப்பற்றிய விபரங்களும், இரண்டாவதாக, ஈழநாடென்னும் இலங் கைத் தீவில் ஜெயித்த ஊர்களின் பெயர்களும், மூன்றாவ தாக, கடல்கடந்து கடாரம் வட்டகையில் ஜெயித்த ஊர் களைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும், அவர் கடாரம் கொண்டதைப்பற்றிய சாஸனப் பகுதி யில், ''அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்........ மாநக்க வாரமும் தொடுகடற் காவற் கடுமுரட் கடார மும்'' எனக்கூறப் பட்டிருக்கிறது. இது நீளு மாதலால் ஆரம்பத்தையும் முடிவையு மட்டும் கொடுத் திருக்கிறேன். மொழிபெயர்ப்பில் முழுவதையும் கூறு வேன்.

## கடாரம் கொண்ட விதம்

இராஜேந்திர சோழ தேவர் அலைகள் மிகுந்த கட லில் மரக்கலஞ் செலுத்திக் கடாரம் மன்னர் சங்கிராம விஜயோத்துங்கனை யெதிர்த்துக் கைது செய்தார். அவனால் சேமித்து வைக்கப்பட்டிருந்த பொக்கிஷங் களனைத்தையும் கைக்கொண்டார். செழிப்பும் வனப்பு முள்ள ஸ்ரீ விஜயாவையும், நீராடும் துறையுடன்கூடிய பண்ணையையும்; இயற்கையழகு பொலிவுற்றிலங்கும் மலைக்குன்றின்மீது கோட்டை கொத்தளங்களால் சூழப் பட்டிருக்கும் மலையூரையும்; ஆழமுள்ள கடலை அகழி யாகக் கொண்டிலங்கும் மாயிருடிங்கத்தையும்; யுத்த பயமற்ற இலங்காசோகத்தையும்; போதிய தற்காப்பு களைக்கொண்ட மாபப்பாளத்தையும்; கோட்டையை அரணாகக் கொண்டு விளங்கும் மேவிலிம்பங்கத்தையும் அடர்ந்த வனத்தையும், உழுது பயிரிடும் நிலத்தையும் உடைய வளைப்பந்தூருவையும்; கல்வி கேள்விகளிற் சிறந்த மேதாவிகளால் புகழப்படும் தலைத்தக்கோலத் தையும்; பலமான கோட்டையைத் தாங்கி நிற்கும் மாதமாலிங்கத்தையும்; வித்தியா பயிற்சியில் அளவு

கடந்த ஆற்றலும், ஆக்கமும் உடைய இலாமுரி தேசத்தையும்; தேனைச் சொறியும் பூந்தோட்டங்களைக் கொண்ட மாநக்கவாரத்தையும்; யாவரும் பிரமிக்கும் படியான காலாட் படைகளின் வலிமைபெற்ற கடாரத்தையும் இராஜேந்திர சோழ தேவர் வசப்படுத்திக் கொண்டார், என திருக்களார் செப்பேட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறது. கடாரம் வட்டாரத்திலுள்ள அந்தப் பதின்மூன்று ஊர்களும் எவைகளாயிருக்கக் கூடுமென்பதை ஓரளவு கூறிச் செல்கிறேன்.

1. ஸ்ரீ விஜயா சுமத்ரா தீவு. இப்போது பாலம் பாங் என்று அழைக்கப்படும் ஊர். சிகன்டூன் மலையடி வாரத்தில் காணப்படும் (683-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல் வெட்டில்) அந்த மலைக்குச் சமீபத்தில் ஸ்ரீ விஜயா ராஜதானியாய் அமைத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப் படுகிறது.

2. பண்ணை சுமத்ரா தீவுக்கு வடக்கே. பனே நதி முகத்து வாரம். நீராடும் துறை.

3. மலையூர் சுமத்ரா தீவு ஜம்பீ பழைய தலை நகரமாகும். (671 இஸிங் குறிப்பு) (1154 ஆண்டின் இட்ரிஸி குறிப்பு) ஆங்கிலேயர்கள் குறிப்பு. முதலியவைகளிலிருந்து தெரிய வருகிறது.

4. மாயிருடிங்கம் மலே தீபகற்பம் கிழக்குக் கரையில் டான்பலீன் நதி முகத்துவாரத்தில் ஜிலோட்டின் என்று வழங்கப்படுகிறது.

5. இலங்கா சோகம் மலே தீபகற்பம். கெடா தென் கோடிக்குக் கிழக்கே ஐந்து மைல்களுக் கப்பா லிருக்கிறது. M. M. (J. I. A., III)

6. மாபப் பாளம் கரா தீவுக்கு மேற்கே கரையோரத்திலிருக்கிறது. இன்று சயாமியர் ஆதீனத்திலிருக்கிறது. அன்று பர்மியர் வசத்தி

விருந்தது. M. W. (A. R. E. 1889—99) S. I. I., III.

7. மேவிலிம்பங்கம் மலே தீபகற்பத்தின் மேற்குக்கடற்கரை யோரத்திலிருக்கிறது. சயாமியர் ஆளுகைக்குட்பட்டது. பிங்கா என்றழைக்கப்படுவது அவ்வூர் தான்.

8. வளைப்பந்தூரு மலே தீபகற்பத்திலுள்ள பண்டூன் என்ற ஊராயிருத்தல் வேண்டும். ஸீடிஸ் என்பவர், கரா தீவில் இருப்பதாகச் சொல்லுகிறார்.

9. தலைத்தக்கோலம் மலே தீபகற்பத்துக்கு மேற்கேயுள்ள டகோபா என்றழைக்கப்படும் ஊராகும். J. R. A. S. 1904.

10. மாதமாலிங்கம் மலே தீப கற்பம். 1230-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட ஸேயா கல்வெட்டின்படி அந்த வட்டகையைச் சேர்ந்த டாம்ரலிங்கம் என்றழைக்கப்படும் ஊர் அதுவாகும்.

11. இலாமுரி தேசம் சுமத்ரா தீவிலுள்ள லாமுரி என்ற ஊராகும்.

12. மாநக்கவாரம் நிக்கோபார் தீவாகும். H. M.

13. கடாரம் மலே தீபகற்பத்தைச் சேர்ந்தது. இப்பொழுது பிரிட்டிஷ் ஆதீனத்திலிருந்து வருகிற கெடா என்ற ஊராகும். இதுதான் என்பதை வலியுறுத்துவதற்கு, முன்னே அந்த ஊர்ப் பெயர் வழங்கப்பட்டு வந்த முறையைச் சிறிது விவரிக்கிறேன்.

1. 691-ஆம் ஆண்டில் சீனர் ஈஸிங் என்பவரால் கேட்டா என்றும்,

2. 844-ஆம் ஆண்டில் அராபியர் என்கோடஸ்பே என்பவரால் கிலஹ் என்றும்,

3. 851-இல் பெர்ஷியாக்காரர் சுலேமான் என்பவ ரால் கலஹ் என்றும்,
4. 1030-இல் தமிழ் திருக்களார் செப்பேட்டில் கடாரம் என்றும்,
5. 1044-ஆம் ஆண்டின் மலேயா சம்ஸ்கிருத சாஸனத்தில் கடஹ என்றும்,
6. 1044-ஆம் ஆண்டின் தமிழ் சாஸனத்தில் கடார, கிடார என்றும்,
7. 1068-ஆம் ஆண்டின் வீர ராஜேந்திர சோழ ரது தமிழ் கல்வெட்டில் கடாரம் என்றும்,
8. 1225-ஆம் ஆண்டில் சீனர் சோஜ-குவா என் பவரால் கிடோ என்றும்,
9. 1256-ஆம் ஆண்டின் பாண்டு கல் வெட்டில் கடாரம் என்றும்,
10. 1380-ஆம் ஆண்டு சமஸ்கிருத பிரபஞ்சத்தில் கிட என்றும்,
11. 1399-ஆம் ஆண்டில் சீனர் ஊப்பேபிரு என் பவரால் கிட என்றும்,
12. 1450—1500-ஆம் ஆண்டுகளில் வரையப்பட்ட இந்து சரித்திரத்தில் கேடா என்றும்,
13. 1501-ஆம் ஆண்டின் இஸ்லாமிய குறிப்புகளில் கேடஹ் என்றும்,
14. 1679-ஆம் ஆண்டில் டிபோன் ரே என்னும் ஆங்கிலேயரால் கேடஹ் என்றும்,
15. 1937-இல் மலே தீபகற்பத்திலுள்ள சீனர்க களால் கிட என்றும்,

சென்ற 1240 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச் சியாய் சிறிது திரிபுபட பழைய தலைநகரமாகிய கேடாவை ஒவ்வொரு வகுப்பாரும் அவரவர் பாஷைக்

குகந்தாற்போல், காலத்துக்கேற்றவாறு அழைத்து வந்தனர்.

## கடாரம் என்பது பெகு அல்ல

ஆதலால், மிஸ்டர் டோஸென்ய்க் கோவின் சாஸனப்படி முதலாம் இராஜேந்திர சோழர் ஜெயித்ததாகச் சொல்லப்படும் கிடாரம், பெகுவாயிருக்க முடியாது. பழைய தலைநகராகிய கேடா என்பது கிடாரம் என ஊர்ஜிதமாவதாலும் கடாரமுடன் சேர்ந்தபதின்மூன்று நாடுகளும் மலே தீபகற்பம், சுமத்ரா தீவுகளில் காணப்படுவதாலும் பெகுவை (பகான் கல்வெட்டுகளில் உஸ்ஸா பெகு) என்றும் ஷுவேமோடோ, கல்யாணி சாஸனங்களிலும் பாலி பாஷையிலும், ஹந்தாவாடி (அம்சாவதி) என்றும் தல்லாய்ங் பாஷையில் B பகோஹ் என்றும் ராஜவம்ச ဗေ၀ံ သဂထ။ கட்டா தல்லாய்ஙில் B பகோ வென்றும் உபங்ந ஹந்தாவடி தல்லாய்ங் பாஷை சரித்திரத்தில் D டின்ஹந்தா வென்றும், நவடேஜீயாடுக்களில் ஹந்தாவடி யென்றும், அலவ்ன்மீன்டயா சரித்திரத்தில் பகோ வென்றும், டோஸெய்ன்கோ காலத்தில் பர்மிய பாஷையில் பேகு வென்றும், ஆங்கிலத்தில் பீகு வென்றும் அழைத்து வந்திருப்பதும் வருவதும் தெளிவாகிறபடியாலும், சோழரது சரித்திரத்தில் ராமண்ய தேசத்தை வசப்படுத்தியதாகச் சொல்லப்படவில்லை யாதலாலும், ஹ்மான்னன், தல்லாய்ங், பெகு முதலிய சரித்திரங்களில் இந்தியர்கள் பெகுவை ஜெயித்ததாகக் கூறப்படவில்லை யாதலாலும், டோஸெய்ன்க் கோவின் சாஸமானது பெருந்தவறுள்ளதாருமெனச் செப்ப வேண்டியவர்களா யிருக்கிறோம்.

## இந்தியர் ஜெய ஸ்தம்பமா?

கடாரம், பெகு அல்ல வென்பதைச் சுட்டிக்காட்டி விட்டேன். பெகுவில் நாட்டியுள்ள ஸ்தம்பங்களிரண்டும் முதலாம் இராஜேந்திர சோழரின் வெற்றிச் சின்

னங்களாக மாட்டாவென்பதற்கும், 1068-ஆம் ஆண்டில் இரண்டாம் தடவையாக முதலாம் சோழரின் குமாரர் வீர ராஜேந்திரர் T. A. S. III A. I. கடாரத்தை ஜெயித்ததற் கடையாளமாய் நாட்டிய ஜெய ஸ்தம்பங் களா யிருக்க முடியாதென்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. பகானில் அநோரட்டா மீன்-ஸோவும் (அநவரதன்) இந்தியாவில் வீர ராஜேந்திர சோழரும் சாம்ராஜ்யபாரத்தை யேற்க வேண்டியவர் களாயிருந்தார்கள். (1044-1077-ஆம் ஆண்டுகளில்) (ဘုရား) E. B., I

## சான்ஸீத்தாவும் சோழ இளவரசியும்

இராஜேந்திர சோழர் வமிசத்தைச் சேர்ந்தவர்கள் பர்மாவை ஜெயிக்கவில்லை. சான்ஸீத்தா காலத்தில் அதாவது 1084—1112-ஆம் ஆண்டில் சோழ நாட்டு இளவரசரொருவர், (அரிமதனப்பூர்) பகானுக்கு விஜயம் செய்தார். அவர் தம்முடைய புத்திரியைச் சான்ஸீத்தாவுக்குக் கன்னிகாதானம் செய்தார். இதற்குப் புரோம் ஷ்வேஸான் டோ பகோடா (பொற் கோவில்) தல்லாய்ங் கல் வெட்டில் E. B. 1. 2 விளக்கமாய் தீட்டியிருப்பது தக்க சான்றாகும். இந் நிகழ்ச்சியால் பர்மியரது அந்தஸ்து ஒரு படி உயர்கிறது.

## அலமீந்தாவும் இந்தியரும்

1164—1181-ஆம் ஆண்டுகளில் பெகு மன்னர் விமல ராஜன் காலத்தில், ஏழாயிரம் வங்க நாட்டு வீரர்கள் பெகு மீது படையெடுத்து வந்தார்கள். அப்பொழுது அந்த ஏழாயிரம் வீரர்களையும் எதிர்த்து அஸமீந்தா என்னும் இளவரசன் வெற்றியை நிலை நாட்டினன். ராஜவம்ச கட்டா, B பகோ சரித்திரம் உபங்க ஹந்தாவடி சரித்திரம் B. F. L. 745. எனவே, பெகுவில் நாட்டியுள்ள ஸ்தம்பங்களிரண்டும் இந்தியரது வெற்றியைக் குறிக்கும் சின்னங்களா யிருக்கமுடியாது.

## தமிழர்கள் வீண் பெருமையடைய வேண்டாம்

பெகுவில் வதியும் தமிழர்களும் அவ்வூருக்கு விருந்தாடி வரும் மற்றவர்களும் இந்த ஸ்தம்பங்களைப் பெரிதாக எண்ணிக்கொண்டு பார்ப்பதற்குச் செல்லு கிறார்கள். அதோடு, அவர்கள் டோஸேய்ன்க்கோ சாஸனத்தில் காணும் வாசகங்களை அப்படியே எழுதிக் கொள்ளவும் செய்கின்றனர். தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலே இதைப்பற்றிப் பிரமாதமாய் எழுதி வைத்துப் பெருமை கொள்வார்களென்பதில் சந்தேக மில்லை. தமிழரின் பண்டைக்கால மன்னர் முதலாம் இராஜேந்திர சோழர் பெகுவை ஜெயிக்கவில்லை. இனித் தமிழர்கள் பெருமை கொழிப்பதற்கில்லை.

### டோஸெய்ன்க் கோவின் தவறு

கடாரம் என்பது பெகுதா னென மிஸ்டர் டோ ஸெய்ன்க்கோ தவறாக நினைத்துவிட்டதற்குக் காரணம், இதுவாகத்தானிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். முதலாம் இராஜேந்திர சோழரின் கல்வெட்டை யாதாரமாகக் கொண்டு, தலைத்தக்கோலம் என்பது 'டைக்கலா'வாயிருத்தல் கூடுமென திரு. கனகசபை அவர்கள் வெளியிட்டுள்ளார். மாதமாலிங்கம் என்பது, 'மொவ்டமா'—(மார்டபன்-மர்த்தமான் என்று தமிழில் இன்று அழைக்கப்படுகிறது)வாகத் தானிருக்க வேண்டு மென்று கனகசபை, ஸ்மித், ஹெஸ்வே, பேரிங் (K. S. A. S. B) ஆகியோர் ஒருமித்து தங்கள் அபிப்பிராயத் தைக் கூறியிருக்கின்றனர். அவர்கள் சொல்லுவதை மிஸ்டர் டோஸெய்ன்க்கோ உண்மையென நம்பி விட்டார். மேலும், அவர் கடாரம் என்ற வார்த்தையின் கடைசி அட்சரங்களாகிய (ரம்) என்பதை "ராமண்ய" மாக அர்த்தம் செய்து கொண்டிருப்பதாய்த் தெரிகிறது.

### கல்விமான் அல்ல

29-1-37-ல் வெளியான "ஸன்" பத்திரிகையில், தேசிய பாடசாலை இன்ஸ்பெக்டர் ஊப்போச்சா என்

பார், எம்மை யாதரித்து நீண்டதோர் கட்டுரை யொன்றை எழுதியுள்ளார். அதில், 1919-ஆம் ஆண்டில் வெளியான பர்மா சிலாசாஸன இலாகா யாதாஸ்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக நான் அவருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். அதைப் படித்துப் பார்த்தேன். அது, காலம் சென்ற டோஸெய்ன்க்கோவும் தற்போதைய சிலாசாஸன அதிகாரி டூராய் ஸெல்லும் சேர்ந்து தயாரித்ததென்பது புலனாயிற்று. 49வது பாராவில் மிஸ்டர் லீடியால் கூறப்படும் கடாரம் என்ற நாடு பெகுவாக மாட்டாதென்பதை மிஸ்டர் டூராய் ஸெல் மறுத்திருக்கிறார். இதைப்பற்றி மிஸ்டர் டோஸெய்ன்க்கோ அவரோடு சம்பாஷித்திருக்கிறார். இதுமட்டும் அல்ல. 1917-ஆம் ஆண்டில் மிஸ்டர் ஸி. ஓ பிளாடிங் என்பவர், R. S. A. S. B. யில் கடாரம் பெகு எனச் சொல்லப்படுவதை ஆட்சேபித்துள்ளார். அதை மிஸ்டர் டோஸெய்ன்க்கோ நன்கறிவார். கடாரம் பெகு அல்லவென்பதை அவர் உணர்ந்த பின்பும், அவர் காலமாகும் வரை, தம்மால் ஏற்படுத்தப்பட்ட சாஸனத்தை வாபீஸ் பெற்றாரில்லை. உண்மையைத் துலக்கும் சாஸனத்தை அவரால் ஏற்படுத்தவும் முடியவில்லை. கல்விமான்களென்போர் தங்களுடைய தப்பிதத்தை யுணரும்பொழுது அதைத் திருத்திக் கொள்ள யத்தனிப்பார்கள். அது மனித சுபாவமாகும்.

## தேசாபிமானமுண்டா ?

5-3-37-ந் தேதியிட்ட "ஸன்" பத்திரிகை தினசரி இதழில், கடாரம் பெகு அல்லவென்பதைக் கடந்த 15, 20 வருடங்களாக பர்மாவின் மக்கள் தெரிந்து கொண்டிருப்பதாய் ஊப்போச்சா எழுதியுள்ளார். அப்படித் தெரிந்திருந்தும் எந்தப் பேராசிரியராவது, எந்தப் பண்டிதராவது, எந்த இன்ஸ்பெக்டராவது பர்மியரை இழிவுபடுத்தும் டோஸெய்ன்க்கோ சாஸனத்தைத் தவறு என்று சொல்வதற்கு துணிபு கொள்ளவில்லை யென்பதை ஊப்போச்சா ஒப்புக்கொள்வார்.

தங்களைப் பேராசிரியர்கள் எனச் சொல்லிக்கொள்பவர்களுக்கு உண்மையில் தேசாபிமானமுண்டாவென நான் சந்தேகப்பட்டதுண்டு. "ஹந்தாவடி குறிப்பு" என்னும் தலைப்பின் கீழ் "ஸன்" மாத சஞ்சிகையில், எனது ஆராய்ச்சியின் முடிவுக் கட்டுரையை வெளியிட்டு நாடறியச் செய்தேன். அவ்விதம் வெளியிட்டு முடிவைக் காணுமலிருக்கும் பட்சத்தில், அந்தத் தவருன சாஸனம் இன்னும் எவ்வளவு காலம் வரை நிலைத்திருக்குமோ! சொல்வதற்கில்லை.

## தகாத வார்த்தை

நான் முடிவு கட்ட ஆரம்பித்தேன். ஊப்போச்சா அதை ஆமோதித்தார். பெகு வரி செலுத்துபவர்கள் சங்கம் வேலை செய்தது. இக்காரணங்களால் டோஸெய்ன்க்கோ சாஸனம் சிதைவுற்றது. சிலாஸாசன அதிகாரி, பெகு டெபுடி கமிஷனருக்கு சாஸனத் தகட்டை யகற்றும்படி கடிதம் எழுதியிருந்தார் அதன் கடைசிப் பாகத்தில், டெபுடி கமிஷனர் தகுதி என நினைக்கும் வேறெந்த இடத்திற்கும் அந்த ஸ்தம்பங்களை யெடுத்துச் செல்லலாமென கூறப்பட்டிருக்கிறது. பர்மியரது அந்தஸ்தைப் பாதிக்கக் கூடிய சாஸனம் ஏற்பட்ட கால முதல் அந்த ஸ்தம்பங்களை அரசாங்கத்தார் பாதுகாத்து வந்தனர். பர்மியரை அவமதிக்கும் சாஸனத்துக்கு இனி இடமில்லாதுபோகவே, ஸ்தம்பங்களை எங்கு வேண்டுமாலும் எடுத்துச் செல்லலாமெனச் சொல்லப் படுகிறது. இது மிகவும் இழிவுபடுத்துவதாகும்.

## நகர்த்த வேண்டாம்

ஊருக்கு வெளியில் அடர்ந்த காட்டில் கிடந்த ஜெய ஸ்தம்பங்களை அரசாங்கத்தார் அப்புறப்படுத்தி இப்போதைய இடத்தில் நாட்டி வைத்தார்கள். இதற்கு நாம் நமது நன்றியைச் செலுத்துகிரும். அன்று அப்புறப் படுத்தாதிருந்தால், புதையல் வேட்டையாடுபவர்க

ளாலும் மாடு மேய்க்கும் சிறுவர்களாலும் இன்று அவைகளிரண்டும் உருக்குலைந்து போயிருக்கும். இப்போதைய இடத்திலேயே ஸ்தம்பங்களை வைத்திருப்பது உசிதமாகும்.

## பெகு ஜெயஸ்தம்ப வரலாறு

பூர்வ காலத்தில் தல்லாய்ங்காரர்களின் உறைவிடமாக பெகு இருந்திருக்கிறது பெகுவைக் குறித்து பர்மிய சரித்திரத்திலும் பர்மிய பாஷை மொழிபெயர்ப்புக்களிலும் கூறப்பட்டிருப்பவற்றைக் கொண்டு நான் திருப்தி யடைந்து விடவில்லை. தல்லாய்ங் பாஷையிலுள்ள பெகு சரித்திரத்தைப் பற்றிய புத்தகங்கள் பலவற்றைப் படித்துப் பார்த்தேன். அவற்றுள் ராஜவம்ச கட்டாவையும் சயாமிய பாஷையிலுள்ள உபங்ரு ஹந்தாவடி ராஜவம்ச மென்னும் புத்தகங்களையும் ஆதாரமாக எடுத்துக் கொள்வோம்.

## இராஜாதிரியும் ஸ்தம்பமும்

1383-1421 ஆம் ஆண்டுகள் வரை, பெகுவை அரசுபுரிந்தவர் ராஜாதிரி. அவர் அரியாசனத்திலமர்ந்ததைப்பற்றியும், அவர் ஜெயித்ததற்கு அடையாளமாய் வெற்றி மண்மேல் தமது பாதத்தை வைத்ததைப்பற்றியும் அவ்விரண்டு சரித்திரங்களில் சொல்லப்படுகின்றன. பகைவரைத் தோற்கடிக்கும் போது பண்டைய மன்னர்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்பினர் ராஜாதிரி. உடனே அவர் தமது அரண்மனைப் புரோகிதர்களைக்கூப்பிட்டு விசாரித்தார். பூர்வகாலத்தில் மொவ்டமா (மார்டபன்) அரசர்கள் பகைவரைத் தோற்கடித்து, தாங்கள் ஜெயித்ததற்கு அடையாளமாக வெற்றியைக் குறிக்கும் மண்மேல் காலடி வைத்தார்களென்ற விபரங்களைப் புரோகிதர்கள் மன்னருக்குத் தெரிவித்தார்கள். மேலும் அவர்கள் கூறியது:- "அஸமீந்தா என்பவர், வங்கச் சேனைகளைத் தோல்வியுறச் செய்து வெற்றியை நிலை நாட்டினர்.

எந்த இடத்தில் அந்தச் சேனைகளைத் தோல்வியுறச் செய்தாரோ, அந்த இடத்தைக் குறிப்பிடுவது எதுவோ, அதுவே வெற்றி மண் எனச் சொல்லுகிறார்கள். சாஸனத்தோடு கூடிய ஸ்தம்ப மொன்றைப் பௌத்தாலயத்துக்குத் தெற்கே, பஜாருக்குக் கிழக்கேயுள்ள சமீப இடத்தில் ஊன்றியுள்ளார்கள். வெற்றி மண்ணாகப் பரிணமிக்கும் அந்தத் தங்க நிற மண் தரை, அடுத்தாற் போலிருக்கிறது. அதுதான் ஜெயித்ததைக் குறிக்கும் அடையாள மண், நீங்கள் அந்த இடத்தில் கோவில் ஒன்றைக் கட்டுங்கள். அப்பால் அந்த மண்ணுள்ள இடத்திற்குச் சென்று அதன் மீது உங்கள் பாதத்தை வையுங்கள். இச் சடங்குகளை செய்து கொண்ட பின்னர், அரியாசனத்தில மருங்கள்.'' புரோகிதர்கள் சொல்லியது போல் பௌத்தாலயமொன்றைச் சீக்கிரத்தில் கட்டி முடிக்கும்படி ராஜாதிரி மன்னர் கட்டளை பிறப்பித்தார். உடனே ஆலயம் கட்டப்பட்டது. ஆலயத்திற்கு செஜனதச் சொவ்ன் என்னும் பெயர் மன்னரால் சூட்டப்பட்டது. பின்னர், ராஜாதிரி மன்னர் வெற்றி மண்ணிலே காலை வைத்தார்.

மேலே சொல்லியுள்ள விபரங்களைக் கொண்டு பார்க்கும் பொழுது,

1 அஸமீந்தா இந்தியரை ஜெயித்த இடமாகிய வெற்றி மண்ணில் ஸ்தம்பம் ஒன்று நாட்டப்பட்டிருக்கிறது.

2 யாரால் நாட்டப்பட்ட தென்பதற்குப் பெயர் காணப்படவில்லை.

3 ராஜாதிரி பட்டத்துக்கு வரு முன்னர் செஜனதச் சொவ்ன் என்ற பெயரால் பௌத்தாலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கும் விபரம், ஜெய ஸ்தம்ப வரலாறு சம்பந்தமாய் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

## அஸமீந்தாவும் இந்தியரும்

ராஜாதிரி மன்னரது சரித்திரத்தில் ஜெய ஸ்தம்பம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அஸமீந்தா வங்

காளியரை மடக்கியபோது அந்த ஸ்தம்பம் நாட்டப் பட்டிருக்குமா வென்பதைப்பற்றி ராஜவமிச கட்டா வில் தேடிப் பார்த்தேன். அதில், 1164-1181 ஆம் ஆண்டுகளுக்கு மத்தியில் பெகு அரசர் விமலர் காலத் தில் அஸமீந்தா வங்காளியரை ஜெயித்ததாகவும், மரக் கலங்களில் வந்திறங்கிய இந்திய சேனைகளையும், பொருள்களையும், அரசர் விமலரிடத்தில் ஒப்படைத் தாரென்றும், இந்தியரை ஜெயித்த இடத்தில் கட்டப் பட்டுள்ள ஆலயத்திற்கு செஜன வென்ற பெயரிட் டார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஆதாரத்தைக் கொண்டு,

1 அஸமீந்தா இந்தியரை ஜெயித்ததன் ஞாபகார் த்தமாக ஊன்றப்பட்ட ஸ்தம்பம் தான் அது எனச் சொல்வதற்கில்லை.

2 போரில் ஜெயித்ததற்கு அடையாளமாய் அந்த இடத்தில் கட்டப்பட்ட கோவிலைச் செஜன வென்னும் பெயரிட்டழைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

## டகாயூப்பியும் ஸ்தம்பமும்

பெகு அரசர் டகாயப்பி (பர்மிய பாஷையில் துஷின்டகாயூப்பி) காலத்தில் ஹந்தாவடியை நோக்கி மீன்டயா ஷுவேட்டீ என்னும் மன்னர் படை யெடுத்தார். அப்பொழுது ஹந்தாவடி தலைநகரில் அப சகுனங்கள் உண்டாயின. இச் சம்பவங்கள் 1535 ஆம் ஆண்டில் நிகழ்ந்தன. இச் சம்பவங்களுள் ஒன்றைப் பற்றி விவரிப்பாம். தல்லாய்ங் பாஷையில், (တိုက်တမနေး လဗိုတ်ဒေါ်ပ်အာ) அதாவது ஜெய ஸ்தம்பம் புயற் காற்றால் நிலத்தில் சாய்ந்தது என்னும் அர்த்தத்தைத் தரக்கூடிய வாசகங்கள் ராஜவம்ச கட்டாவில் காணப் படுகின்றன.

## ஹ்மான்னன் சரித்திரம்

ராஜபாரம்பரியஹ்மான்னன் சரித்திரத்தில் 219-வது பக்கத்தில், ஸமலா ஸ்தம்பம் அதுவாக வீழ்ந்து விட்

டது. எனச் சொல்லியிருப்பதைக் காணலாம். எமது பிரதம சிஷ்யர் ஹந்தாவாடி ஊப்பு என்பவர், ஹ்மான்னுன் சரித்திரத்திலிருந்து, இதைச் சான்ருக வைத்துக் கொண்டு சமீபத்தில் நடந்த பெகுவாசிகளின் பொதுக் கூட்டத்தில் பகிரங்கப் படுத்தினர்.

ஹ்மான்னுன் சரித்திரத்தைக் கொண்டு பார்க்கும் பொழுது ஸமலா ஸ்தம்பம் இந்தியரை ஜெயித்ததன் ஞாபகார்த்தமாக ஊன்றப்பட்டதாய் ஏற்படுகிறது.

## "ஸமல-ஸமன-ஸன"

ஸமலா என்னும் தல்லாய்ங் வார்த்தைக்கு ஜெயமடைதல் என்பது பொருள். ஸமலா என்னும் பதம் புராதீன காலத்தில் உபயோகிக்கப்பட்டது. இக்காலத்தில் இப்பதம் ஸமன, ஸன என்று மருவிற்று. தற்கால நாகரீகம் பரவாத இடங்களில் ஸமலா என்று தல்லாய்ங் காரர்களால் இதுகாறும் உச்சரிக்கப்பட்டு வருகிறது. மேலே கூறியிருப்பதுபோல், ஜெய ஸ்தம்பங்களைப் பற்றிய வரலாறுகள் அந்தக் காலங்களில் மட்டும் காணப்படுகின்றன. பிற்காலங்களில் அவைகளைப் பற்றிய விபரங்கள் தல்லாய்ங் சரித்திரங்களில் பார்ப்பதற்கில்லை.

## மற்றுமொரு ஆதாரம்

அல்லவ்ன் மீன்டயாஜீ என்னும் மன்னருக்கு அமைச்சராயிருந்தவர் லெவ்வே நோரட்டா. 1757 ஆம் ஆண்டில் இவரால் எழுதப்பட்ட குறிப்புகள் உண்டு. அந்தக் குறிப்புகள் வட பர்மாவிலுள்ள மீஞ்சான் சேகரம் ஸேடோ கிராமத்திலிருந்து கிடைத்தன. ஸ்தம்பங்களைப் பற்றிய வரையில் அந்த குறிப்புகளிலிருந்து சில விபரங்களை இதன் கீழ் அப்படியே தருகிறேன்.

> "பஞாஊவின் பழைய அரண்மனைக்கு வடக்கே சிறிது தூரத்தில், தல்லாய்ங் அரசர்கள் ஜெயித்ததற் கடையாளமாய் அவர்களது வெற்றி மண் காணப்படுகிறது. அந்த மண் தரையிலே பஞாஊ


இராஜேந்திர சோழ தேவர்
கொண்ட அயல் நாடுகளைக்
காண்பிக்கும் படம்
பெகு
மாபப்பாளம்
வளைப்பந்தூரு
தலைத்தக்கோலம்
மாதமாலிங்கம்
மேவிலிம் பங்கம்
மாநக்கவரம்
இலங்கா சோகம்
இலாமுரி தேசம்
கடாரம்
மா யிருடிங்கம்
பன்னை
மலையூர்
ஸ்ரீவிஜயம்



கடாரங் கொண்ட சாஸனம் 1030 கி. பி. யிலேற்பட்ட திருக்களர் செப்பேடு.



ஜெயஸ்தம்பங்கள்
கண்டெடுக்கப்பட்ட ஆதி இடம்

# உங்கள் வருங்காலம்
# அறிய
## புரொபசர் டி. பி. லாம்
## அவர்களிடம் ஆலோசியுங்கள்

(Palmistry)

ரேகை சாஸ்திரம்

(Astrology)

ஜோதிஷம்



(Numerology)

எண் சாஸ்திரம்

(Horary Astrology)

ஹோரரி முறை

## எது மூலம் வேண்டும்?

உலகின் பலபாகங்களினின்றும் பல பதக்கங்களும் நற்சாட்சிப் பத்திரமும் பெற்றவர்.

வருங்கால பலனை அறிவிப்பதில் புகழ்பெற்றவர்.

புரொபசர் டி. பி. லாம்,

231, மோகல் வீதி, ரங்கூன்.

Tel:-"Palayakatco" Head office:-Madras

ஆடவர் பெண்டீர் அனைவரும் சென்று
ஆசிக்கும் ஆடையை அடைவது

எ ங் கே ?

## 'பீதாம்பர மாளிகை'

"SILK PARADISE"

ஒன்றே !

சகலவித ஜவுளிகளும்
உத்தரவாதத்துடன் கிடைக்கும்,
கொளும்பு குடைகள் விற்பனைக்குத் தயார்

ஒரே விலை ! கறார் விலை !

"உண்மையே உத்தமக் கொள்கை"
என்பது எங்கள் நோக்கம்.

ஒருமுறை விஜயம் செய்யின்
உண்மை விளங்கும்

---

மதறாஸ் பளயகாட் கம்பெனி
லிமிடெட்,
221-223, முகல் வீதி, ரெங்கோன்.

அரசருடையதும் ராஜாதிரி மன்னருடையதுமான ஜேய ஸ்தம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. பஞாஊ அரசரால் நிர்மாணிக்கப்பட்ட தலைநகரைப்பற்றிய கல்வெட்டு ஒன்றும் இருக்கிறது. கல்வெட்டின் உயரம் 4 முழம். 1349 ஆம் ஆண்டில் ஹந்தாவடி தலைநகரை டஞாஊ அமைத்துக் கொண்டதாக கல்வெட்டில் காணப்படுகிறது. 1252ஆம் ஆண்டில் ஜேய ஸ்தம்பங்கள் நிறுத்தப் பட்டன. இந்தியர்களை அஸமீந்தா ஜேயித்ததன் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டுள்ள பௌத்தால யத்தைப் புதிதாய் நிர்மாணித்தார்கள். கல் வெட் டுக்குத் தெற்கே தங்க நிறத்தையொத்த வெற்றிமண் தரையிருந்து வருகிறது விழுந்து கிடக்கும் ஸ்தம் பம் நீளமானது. அது, ராஜாதிரி மன்னர் போரில் ஜேயமடைந்ததை நிரூபிக்கும் ஸ்தம்பமாகும். டவாஷின் மன்னர் ஹந்தாவடிமீது படையெடு த்து வந்தார். அச்செய்தி கேட்ட அரசர் வெற்றி மண்ணுள்ள இடத்தை நாடி யானைமீதேறிச் சென் ருர். யானை மிரள ஆரம்பித்தது. அகஸ்மாத்தாய் அது ஸ்தம்பத்தில் மோதியது. அதனுல் ஜேய ஸ்தம்பம் சாய்ந்தது. எதிரியைத் தோற்கடித்ததன் ஞாபகார்த்தமாய் கட்டப்பட்டிருக்கும் அஸமீந் தாவின் ஆலயத்திற்கு மேற்கே சிறிது தூரத்தில் ராஜாதிரியால் அமைக்கப்பட்ட பௌத்தாலயம் ஒன்று காணப்படுகிறது. படையெடுத்து வந்த பவாஷின் மன்னர், போரில் தோல்வியடையும் பொருட்டு, தாயத்துக்கள், அட்சரத் தகடுகள் முத லியவற்றை அவ்விரண்டு கோவில்களிலும் வைத் துப் பிரார்த்தனை செய்திருப்பதைக் கண்டேன். அப்பால், ஹந்தாவடி தலைநகர், பவாஷின் மன்ன ருடைய ஆளுகைக் குட்பட்டது. ஜேய ஸ்தம் பங்கள் இருக்குமிடமாகிய ஸேயாவாடி ஆச்ரமம் போய்ச் சேர்ந்தேன். தல்லாய்ங்காரர்கள் பவா ஷின் மன்னரை யெதிர்த்துப் போராட முடியாமல்

சிட்டாங் பகுதியை நோக்கி ஓடிவிட்டார்கள் என்பதை ஸேயாவாடி ஆச்ரம சங்யாசி உண்மை யெனக் கூறுகிறார். அரசரேறே''

## ஸ்தம்பங்களின் பூர்வ இடம்

சரித்திரம், குறிப்பு முதலியவைகளில், ஜெயஸ்தம் பங்களைக் குறித்து பிற விபரங்கள் ஒன்றையும் காணோம். அரசாங்கத்தார் ஜெய ஸ்தம்பங்களை யெந்த இடத்தில் முதலில் கண்டெடுத்தார்களென்பதைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினேன். ஜெய ஸ்தம்பங்கள் கண்டெடுக்கப்பட்ட பூர்வ இடத்திற்கு எம்மை அவின் குணவம்சாவும் ஊபாண்டவாவும் அழைத்துச் சென்றார் கள். அந்த இடம் ஊருக்குக் கிழக்கே இருக்கிறது. அது இப்பொழுது ஸோடிகாயெர்வன் ஆச்ரம காம்ப வுண்டுக் குள்ளிருக்கிறது. 34 வருஷங்களுக்கு முன் னே பெரிய ஸ்தம்பம் சாய்ந்து கிடந்ததை பௌத்த பிக்ஷுக்கள் பார்த்திருப்பதாக எம்மிடத்தில் கூறினார் கள். அந்த இடத்திலிருந்து தான் அவ்விரு ஸ்தம்பங் களையும் அரசாங்கத்தார் இப்போதைய இடத்திற்குக் கொண்டு வந்து நிலை நாட்டியுள்ளார்கள். இந் நிகழ்ச்சி 1908-ல் ஏற்பட்டது.

மேலே கூறி வந்துள்ள தல்லாயங், பர்மிய சரித் திரங்களையும் விசாரணைகளையும் வைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், ஜெய ஸ்தம்பங்களைப்பற்றிய வரையில் கீழே குறிப்பிட்டுள்ள விபரங்கள் வெளியா கின்றன.

1. அஸமீந்தா இந்தியரை ஜெயித்த இடத்தில் செஜன ஆலயமிருக்கிறது.

2. அஸமீந்தா கட்டிய அந்தக் கோவிலை பஞாஊ அரசர் புதுப்பித்தார்.

3. 1352-ஆம் ஆண்டில் பஞாஊவால் ஹந்தா வடியில் ஜெய ஸ்தம்பம் நாட்டி வைக்கப்பட்டது.

4. ஜெய ஸ்தம்பம் நாட்டியதற்கு ஆதாரமாய் அதற்குப் பக்கத்தில் கல்வெட்டு இருப்பதைத் தாம் பார்த்ததாக அமைச்சர் லெவ்வே நோரட்டா தமது குறிப்பில் எழுதியுள்ளார்.

5. ராஜாதிரி மன்னர் அரியாசனத்திலமருமுன், அஸமீந்தா வெற்றியடைந்த இடத்துக்கருகில் செஜன பொற் கோவில் கட்டப்பட்டது.

6. ஹந்தாவடியில் டகாயூப்பி ஆளுகையின் போது ஜெய ஸ்தம்பம் சாய்ந்தது எனச் சொல்லப்படுவதால், ஜெய ஸ்தம்பங்கள் ஹந்தாவடியில் மட்டும் இருந்தனவென்பதும் வேறிடங்களில் கிடையாதென்பதும் தெளிவாகிறது.

7. 1757-1759ஆம் ஆண்டில் ராஜாகிரியின் ஜெய ஸ்தம்ப மீது பியாமைன்டி அரசர் ஏறிச்சென்ற யானை மோதியதால், திரும்பவும் அது சாய்ந்தது.

8. நீளமாயிருக்கும் ஜெய ஸ்தம்பம் ராஜாதிரியின் வெற்றியைக் குறிக்கும் சின்னமாகும். எனவே, குறுகிய ஸ்தம்பம், பஞாஊவினதாயிருத்தல் வேண்டும்.

9. இரண்டு ஜெய ஸ்தம்பங்களையும் பஞாஊவின் பழைய தலை நகரத்தில், முன்னே ஸேயாவாடி ஆச்ரமமாயிருந்து, இப்பொழுது ஸோடிகாயொவ்ன் ஆச்ரமமாயுள்ள—காம்பவுண்டுக்குள் கண்டெடுத்திருக்கின்றனர்.

10. அந்தப் புராதன இடத்திலிருந்து அவ்விரண்டு ஸ்தம்பங்களையும் பர்மா அரசாங்கத்தார் கடந்த 1908-ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தி இப்போதைய இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தி வைத்தார்கள்.

தக்க ஆதாரங்களைக் கொண்டு ஸ்தம்பங்களைப் பற்றிய வரலாற்றைத் தெளிவாய் அறிந்து கொண்டோம். இதன்பேரில் 1937-ஆம் ஆண்டு, ஏப்ரல்

பனிரண்டாம் நாளில் டோஸெய்ன்க்கோ சாஸனம் எடுக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாய் கீழ்வரும் விபரங்களைக் கொண்ட புதிய சாஸனம் ஒன்று புகுக்கப்படல் வேண்டும்.

"1348-1383-ஆம் ஆண்டுகளில் ஹந்தாவடி பேகுவை ஆட்சி புரிந்த பஞாஊவின் வெற்றியைக்குறிக்கும் சிறிய ஸ்தம்பமும், 1383-1421ஆம் ஆண்டுகளில் அரசாட்சி செய்த ராஜாதிரி மன்னரின் வெற்றியைக் குறிக்கும் பெரிய ஸ்தம்பமும், பயின்னவ்ன் தலை நகருக்குக் கிழக்கிலும் பஞாஊ தலை நகருக்குள்ளும் இப்போதைய ஸோடிகாயோவ்ன் ஆச்ரமத்துக்குக் கிழக்கிலும், இந்தியரை அஸமீந்தா இளவரசர் 1164—1181ஆம் ஆண்டுகளுக்கிடையில்ஜெயித்தசற்கடையாளமாயுமுள்ள வெற்றி மண் தரையிலிருந்து அரசாங்கத்தாரால் 1908 ல் இங்கு கொண்டுவரப் பட்டன.

# பெகு ஜெய ஸ்தம்பங்கள்

[தேசீய பாடசாலை இன்ஸ்பெக்டரும் சரித்திர ஆராய்ச்சியாளருமான ஊப்போச்சா.]

(29-1-37)ல் வெளிவந்த "ஸன்" பத்திரிகை தினசரி இதழில் எழுதியிருப்பது வருமாறு:—

1937-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளி வந்த "ஸன்" மாத சஞ்சிகையில், தேசீய சர்வகலாசாலை சரித்திராசிரியர் ஊத்தெட்டின் என்பார்; "ஹந்தாவடி குறிப்பு" என்னும் தலைப்பில் தொடர்ச்சியாய் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை யெழுதி வருகிறார். கீழே சில உதாரணங்களைக் கொடுத்து, அவர் கூறும் விஷயங்களை நான் ஒப்புக் கொள்கிறேன்.

பெகு நீதிமன்றக் காம்பவுண்டுக்குள் இரு ஸ்தம்பங்களிருக்கின்றன. அவைகளில் ஒன்று நீளமானது, மண்ணில் பதிந்திருக்கும் பாகத்தைச் சேர்த்து அளவிட்டால் அது 11 அடி உயரமிருக்கும். மற்றொன்று 5 அடி உயரமிருக்கலாம். காலம் சென்ற டோஸெய்ன்க் கோ, இந்த ஸ்தம்பங்களைக் குறித்து ஆங்கிலத்தில் சாஸனமொன்றை யெழுதித் தனியாக வைத்துள்ளார். ஸ்தம்பங்களில் எவ்வித வாக்கியங்களும் காணப்படவில்லை. தென்னிந்திய அரசர் முதல் இராஜேந்திர சோழர் கடாரத்தைக் கொண்டதாகக் கல்வெட்டு இருக்கிறது. கடாரம் என்பது பெகுவைக் குறிப்பிடுவதாகும் என டோ ஸெய்ன்க்கோ அபிப்பிராயங்கொண்டு மேலே சொல்லியிருப்பதுபோல் தமது கருத்தை யெழுதிவைத்து விட்டார். ஊத்தெட்டின் கூறுவதுபோல் அவர், கடைசிப்பதமாகிய "ரம்" என்பதை "ராமண்ய"மென அர்த்தப்படுத்திக் கொண்டுள்ளார். இந்தியர் கல் வெட்டில் சொல்லப்படும் கடாரம் பெகு

அல்ல. அது, மலே தீபகற்பத்திலிருக்கிறது. இப்பொழுது அதைக்கீடா வென்றழைக்கின்றனர்.

(1919-ஆண்டு மார்ச்சு மாதவரையுள்ள சிலாசாஸன இலாகா ரிப்போர்ட்டின் 24, 25-வது பக்கங்களில் 46-வது பாராவில் மிஸ்டர் டூராய் ஸெல் கூறியிருப்பதைப் பாருங்கள்) "Leroyaume Crivivaya"வில் பார்க்குமாறு மிஸ்டர் ஹார்வியின் பர்மா சரித்திரத்தில் 322-வது பக்கத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தக் காரணங்களால் கடாரம், பெகு அல்ல என்பது தெளிவாகிறது. கடாரம் பெகுவல்ல என்பதைப்பற்றி இப்போதைய சிலாசாஸன அதிகாரி மிஸ்டர் டூராய்ஸெல் பெகு டெபுடி கமிஷனருக்கு இரண்டு கடிதங்கள் எழுதியுள்ளார். ஒன்று, 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் முதற் தேதியிட்டது. மற்ருென்று, அதே ஆண்டு அதே மாதம் பதினைந்தாம் தேதியிட்டது.

முன்னே டெபுடி கமிஷனராயிருந்த ஊப்பெய்ன் என்பார், 1926-ஆம் ஆண்டில் குறிப்பொன்று எழுதியுள்ளார். அதில் இவ்விரு ஸ்தம்பங்களையும் ஊருக்கு வெளியில் இருபது வருடங்களுக்கு முன்னுல் தாம் பார்த்திருப்பதாகக் கூறியுள்ளார். 1908-ல் அவைகளிரண்டும் இப்போதைய இடத்திற்குக் கொண்டுவரப் பட்டனவாம். இந்திய மன்னர்களின் வெற்றியைக் குறிக்கும் சின்னங்களாய் அவற்றைக் கொள்வதற்கில்லை யென்றும் அவர் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார்.

எனக்கும் அவ் விரு ஸ்தம்பங்கள் விஷயத்தில் சந்தேகம் இருந்து வந்தது. 5 ஆண்டுகளுக்கு முன்னே நான் பெகு சென்றிருந்தேன். அப்பொழுது இரு ஸ்தம்பங்களைக் குறித்து விசாரிக்கலானேன். அன்பர்களுடைய உதவியால் ஸ்தம்பங்களைப் பற்றிய வரலாறுகளை ஓரளவு அறிந்து கொண்டேன்.

சரித்திராசிரியர் ஊத்தெட்டின், தமது கட்டுரையில் ஸ்தம்பங்களைக் குறித்து விளக்கமாய்க் கூறியுள்ளார். அவர் சொல்வது போல் அவ்விரு ஸ்தம்பங்களும் முதலாம் இராஜேந்திர சோழரால் நாட்டப்பட்டவைகளாயிருக்க முடியா தென்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன்.

அலவ்ன்மீன்டயா என்னும் மன்னர் பெருவை ஜெயித்தார். அதற்குப் பின்னால் அவருடைய அமைச்சர் லெவ்வே நோரட்டாவால் குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. அதில், ஸ்தம்பங்களைப் பற்றிய வரலாறுகளிருக்கின்றன. வெற்றி மண் இருப்பதாயும் ஜெய ஸ்தம்பங்கள் இருப்பதாயும் லெவ்வே நோரட்டா விபரமாய்க் கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

இந்தியர்கள் ஹீந்தா கொவ்ன் என்னும் பகுதியைக் கண்டு பிடித்தார்கள். அதன் ஞாபகார்த்தமாய் அவர்கள் இரும்புத் தூண் ஒன்றை ஊன்றினார்கள். பிற்காலத்தில் மூன் ஜாதியாரும் பர்மியர்களும் ஒன்றுபட்டு அந்தக் தூணுக்கு அடியில், வளைந்த இரும்புச் சட்டங்களைப் புதைத்து வைத்தார்கள். இது, அவர்கள் கைக்கொண்ட உபாயமாகும். அப்பால் அப்பகுதியை இந்தியர்கள் கை விடும்படி நேர்ந்தது. அந்த இரும்புத் தூண் 15 அடி நீளமும் 7 சாண் சுற்றளவும் உடையது. பெரு நீதி மன்றத்திலுள்ள ஜெய ஸ்தம்பங்கள் 11 அடி நீளமும் 5 அடி சுற்றளவும் இருக்கலாம். ஆதலால், இந்தியர்கள் ஹீந்தா கொவ்னைக் கண்டு பிடித்த காலத்தில் அதன் ஞாபகார்த்தமாய் அவர்களால் நாட்டப்பெற்ற ஸ்தம்பங்கள் இவைகளே எனக் கொள்வதற்கில்லை. இந்தியர்கள் ஜெயித்ததை முன்னிட்டாவது, கைக் கொண்டதை முன்னிட்டாவது கற்றூண்கள் (ஸ்தம்பங்கள்) ஏற்படவில்லை யென்பது தெளிவாகி விட்டது. அப்படியானால் அந்த ஸ்தம்பங்கள் ஏற்பட்டதற்குக் காரணங்கள் எவையாயிருக்கலாம் என்ற கேள்வி பிறக்கிறது. இந்தச் சிக்கலான பிரச்னையைத்

தீர்ப்பதற்கு ஆதாரம் கண்டு பிடித்தவர் ஊத்கெட்டின். அவரைப் பாராட்டுகிறேன். 1757 ஆம் ஆண்டில் அலவ்ன்பயா பெகுவை ஜெயித்தார். அதை யொட்டி அமைச்சர் லெவ்வே நோரட்டா குறிப்பெழுதினர். அதில், பஞாஊ மன்னராலும் ராஜாதிரி மன்னராலும் நாட்டப்பெற்ற ஜெய ஸ்தம்பங்களிருப்பதாயும் பஞாஊ மன்னரால் தலைநகர் அமைக்கப்பட்டதற்கு அத்தாட்சியாய் கல் வெட்டுப் பலகை யொன்றிருப்பதாயும் கூறியுள்ளார். வெற்றி மண் இருப்பதாயும் அந்த மண்ணில் பஞாஊ வாலும் ராஜாதிரியாலும் நாட்டப்பெற்ற ஜெய ஸ்தம்பங்கள் காணப்படுவதாயும் விவரித்துச் சொல்லியிருப்பவை இங்கே கவனிக்க வேண்டியவைகளாகும்.

பர்மிய மன்னர்கள் எதையோ ஒன்றை வெற்றிச் சின்னமாகக் கொண்டு, அந்த இடத்தை வெற்றி மண்ணாகப் பாவித்திருக்கலாம். பெகுவிலுள்ள மண் தரையானது, பஞாஊ, ராஜாதிரி காலங்களுக்கு முன்னால் ஏற்பட்டதாயிருக்க வேண்டும். எனவே, அது இந்தியரை ஜெயித்ததற் கடையாளமாய் கொள்ளப்பட்ட வெற்றி மண் என்பது, ஹந்தாவடி சரித்திரத்தால் ஊர்ஜிதமாகிறது. வங்கச் சேனைகளுக்கும் மூன் இளவரசர் அஸமீந்தாவுக்கும் கடுமையான யுத்தம் ஏற்பட்டது. எந்த இடத்தில் அஸமீந்தா ஜெயித்தாரோ, அந்த இடத்தையே வெற்றி மண்ணாகக் கொண்டார்கள். அதைப் பிற்கால மன்னர்கள் விடாமல் வெற்றி மண்ணாகப் பாவித்தார்கள். அந்த இடத்தில் அல்லது சிறிது தூரத்தில் அஸமீந்தாவால் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. அதைசை அதாபயா வெனக் கூறுகின்றனர். ராஜாதிரி மன்னர், இளவரசராயிருந்தபொழுது, டகொவ்ன், பெகு ஹந்தாவடி முதலிய ஊர்கள் மீது படை யெடுத்து ஜெயமடைந்தார்.

1383 ஆம் ஆண்டில் ராஜாதிரி மன்னர், தமது வெற்றிக்கு அடையாளமாக அப் புராதீனவெற்றி மண் மீதிலே மிதித்தார் எனவும், அப்பால் அரியாசனத்தி

லமர்ந்தார் எனவும் அவருடைய சரித்திரம் கூறுகிறது. இந்தியரை அவர் ஜெயித்ததால், அதற்கடையாளமாக கோவிலொன்றைக் கட்ட எண்ணினர். பண்டைய மன்னர்கள் கையாடிய முறைகளை அவர் அறிந்து கொள்ள விரும்பினர். எனவே, அரண்மனைப் புரோகிதர்களிடம் விசாரித்தார். அதற்கு அவர்கள் அளித்த விபரங்கள் கீழ் வருமாறு:—

"டகைவரைத் தோற்கடித்து ஜெயமடைந்தீர்கள். வெற்றியின் சின்னமாகத் திகழும் அந்தப் புனித மண் தரைக்குச் சென்று நீங்கள் உங்கள் பாதங்களை அதன் மீது முதலில் வையுங்கள்."

பாசீன், மியாங்மியா முதலிய ஊர்களை வசப்படுத்திக் கொண்ட பின்னர், ராஜாதிரி மன்னர் திரும்பவும் அந்த வெற்றி மண் தரையை யடைந்தார். அதன் மீது தமது பாதங்களை வைத்தார்.

[இக் காரணத்தால் வெற்றிச் சின்னமாய்த் திகழும் கோவிலை, வெற்றி மண்ணைப் பரிணமிக்கும் தரைக்குச் சமீபத்தில் கட்டி வைத்தார்கள் போலும்]

இவைகளினல், அவ் வெற்றி மண் தரையும் ஜெயஸ்தம்பங்களும், பர்மியர் இந்தியரைத் தோற்கடித்ததன் ஞாபகார்த்தச் சின்னங்களாகு மென்பதும் இந்தியரது வெற்றியைக் குறிக்கும் ஸ்தம்பங்கள் அவைகளாயிருக்க முடியாதென்பதும் தெளிவாகிறது.

# இராஜேந்திர சோழன் கடாரங் கொண்டது

திரு, க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ.

முன் ஒருசமயம் முதலாம் இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட வரலாற்றையும் அதைக்குறித்த சாஸனப் பகுதிகளையும் எடுத்துரைத்தோம். இப்போது அவன் கடாரங்கொண்ட செய்தியை விளக்குவோம்.

கலிங்கத்துப் பரணியில் இராச பாரம்பரியத்தைக் கூறிவரும்போது சயங்கொண்டார் இவ்விரண்டு செய்திகளையும் ஒரே பாட்டில் அமைத்திருப்பது யாவரும் அறிந்திருக்கும் விஷயம். அதாவது:—

"களிறு கங்கைநீ ருண்ண மண்ணையிற்
காய்சி னத்தொடே கலவு செம்பியன்

குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்
கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்"

அக்கவிச் சக்ரவர்த்தி மற்றுமோரிடத்திலும், "பரக்குமோதக் கடாரமழித்தநாள்" என்று இச்செய்தியையே குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கடாரம் என்னும் ஊர் மலேயா தீப கற்பத்தின் மேல்கரையில் உள்ளது. இப்போது கெடா என்று வழங்கப்பட்டு வருகிறது. இதையும் தவிர, இன்னும் மலேயாவிலும் சுமாத்ரா என்னும் தீவிலும் உள்ள பல ஊர்களை ஒரே படையெழுச்சியில் இராஜேந்திரனுடைய கப்பற்படைகள் கைப்பற்றின விவரத்தை அவனுடைய சாஸனங்களில் உள்ள மெய்க்கீர்த்தியின் ஒருபாகம் விரிவாகக் கூறுகிறது. இந்தப் பாகம் முதல்முதல் அவனுடைய அரசாட்சியின் பதின்மூன்றும் வருஷத்திலேதான் காணப்படுகிறது; அதற்கு

முன் கிடையாது. ஆகையால் அவன் கடாரங்கொண்டது சுமார் கி. பி. 1024-25 ஆதல்வேண்டும்.

இந்தச் சாஸனப் பகுதியை இதிலுள்ள ஊர்களின் பெயர்கள் தனியாகத் தெரியும் வண்ணம் கீழே தருகிறோம். இவ்வூர்களிருக்கும் இடங்களை இங்கே தந்திருக்கும் படத்தைப் பார்த்து எளிதில் அறிந்துகொள்ளலாம். ஆனால் இன்னும் சில ஊர்களைப்பற்றிய சந்தேகம் முற்றிலும் தீரவில்லை. சாஸனப்பகுதி பின்வருமாறு:—

"அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்ம்மன்
ஆகிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையில் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்த வகனகர் போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைஸ்ரீ விஷயமும் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை யிலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாபப் பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பந் தூறுடை வளைப்பந் தூரும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் வல்வினை மாதமர் லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்

மாப்பொருந் தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்."

இந்தச் சாஸனப் பகுதி, முதல்முதல் கடாரத் தரசனாகிய சங்கிராம விஜயோத் துங்க வர்மனைப் பிடித்து அவனது கரியையும், நிதியையும், வித்யாதர தோரணம் முதலியவற்றையும் கவர்ந்து அதன்பின் ஸ்ரீ விஷயம் முதலாகக் கடாரமீறாக உள்ள ஊர்களையும் இராஜேந்திரன் கைப்பற்றியதாகக் கூறுகிறது. இவ்வூர்களில் ஸ்ரீ விஷயமும் கடாரமும் முக்கியமானவை. ஸ்ரீ விஷயம் என்பது இராஜதானி; இப்போது பாலம் பாங் என்று அழைக்கப்படும் ஊர்; சுமாத்ரா தீவிலுள்ளது. மற்ற ஊர்களெல்லாம் ஸ்ரீ விஷய ராஜ்யத்தைச் சார்ந்தவை. அவற்றுள் கடாரம் மிகப்பெரிய ஊர்; தமிழ் நாட்டினின்று கிழக்கு நோக்கிச் செல்லும் கப்பல்களின் வழியில் முதலாக வரும் துறைமுகப் பட்டினம். ஆகையால்தான் சோழ சாஸனங்களிலும் கலிங்கத்துப்பரணியிலும் இராஜதானியாகிய ஸ்ரீ விஷயத்தைக்காட்டிலும் கடாரம் அதிகப் பிரசித்தி பெற்றதுபோலக் காணப்படுகிறது. ஆனால் இந்தக் கடல் ராஜ்யமானது சீன தேசத்துச் சரித்திர புஸ்தகங்களில் ஸ்ரீவிஜயம் என்றே குறிக்கப்படுகிறது.

சோழ அரசர்களுக்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் நெருங்கின பழக்கங்கள் இருந்தன. அக்காலங்களில் திரவியம் தேடவும் அரசாங்க விஷயங்களை மேலேற்று நடத்தவும் திரைகடலோடினவர் பலராவர். இராஜேந்திரன் தந்தையாகிய முதல் இராஜராஜன் ஒரு பெருங் கடற்படை கொண்டு இலங்கைத் தீவையும் பல் பழந்தீவு பன்னீராயிரத்தையும் (இவை தற்காலம் மால்தீவ்ஸ் என்று வழங்கப்படும் அராபிக் கடல் தீவுகள்) ஜயித்ததாக அவன் சாஸனங்கள் கூறும். இதனால் சோழ அரசர்கள் நிலப்படையைப் பெருக்கித் தென்னிந்தியா முழுவதும் தங்கள் வயமாக்கிக் கொண்ட காலத்திலேயே விசேஷமாகக் கடற்படைகளையும் கொண்டு அயல்நாட்டு வியாபாரத்தை வளர்த்துப் பல தீவுகளையும் கைப்பற்றி அரசாள முயன்றார்களென்பது தெளிவாகும்.

அதே காலத்தில் ஸ்ரீவிஜயமும் சைலேந்திர வம்ச அரசர்களின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு பெருங் கடல் ராஜ்யமாக விளங்கிற்று அரேபியா பாரசீகம் முதலிய மேல்நாட்டு முகமதிய ராஜ்யங்களிலிருந்து இந்துமகா சமுத்திரத்தின் வழியாய்ச் சீனாவுக்குச் செல்லும் வர்த்தகக் கப்பல்களுக்கெல்லாம் இந்த ராஜ்யத்துத் துறைமுகப் பட்டினங்களே தங்குமிடங்களாக இருந்தன. ஸ்ரீவிஜயத்து ஜனங்களும் இந்தியாவுடன் வியாபாரம் செய்தார்களென்று நினைக்க இடமுண்டு. தமிழரும் ஸ்ரீவிஜயராஜ்யத்துக்குச் சென்றிருக்க வேண்டும். இந்த ஊகங்களெல்லாம் ஆதாரமில்லாத மனப்போக்குகளல்ல இராஜராஜன் காலத்தில் நாகபட்டினத்தில் பௌத்த விஹாரமொன்று தன் நாட்டு ஜனங்களுடைய வசதிக்காகக் கட்ட இடந்தந்து அதையும் ஆதரிக்க வேண்டுமென்று ஸ்ரீ விஜய அரசனான மாரவிஜயோத்துங்க வர்மன் இராஜராஜனை வேண்டிக் கொண்டான்; இராஜராஜன் அதற்கிணங்கவே, விஹாரம் 1006 கி. பி. யில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த விஹாரம் இராஜராஜன் வாழ்நாளில் கட்டிமுடிக்கப் படாமையால், அவன் மகன் இராஜேந்திரன் அது கட்டி முடிந்த பிற்பாடு தன் தந்தையின் நோக்கப்படி அவ்விஹாரத்திற்கு ஆனைமங்கலமென்னும் கிராமத்தைச் சர்வமானியமாகக் கொடுத்தான் என்று ஒரு செப்பேடு விவரமாய்க் கூறுகிறது. அவ்விஹாரத்தின் பெயர்கள் சூடாமணி வர்ம விஹாரமென்றும், இராஜராஜப் பெரும்பள்ளி என்றும் வழங்கி வந்தன. அவ் விஹாரத்தினுடைய சர்வ மானியங்கள் கி. பி. 1090-இல் குலோத்துங்கன் செப்பேடு ஒன்றிலும் விவரமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இராஜ ராஜன் அரசாட்சியின் கடைசியில் சீன சக்கரவர்த்தியின் சமூகத்திற்குச் சோழ நாட்டினின்றும் தூதர்கள் பல காணிக்கைப் பொருள்களுடன் அனுப்பப்பட்டார்கள்; இவர்கள் மூன்று வருஷ காலம் வழியே பற்பல தேசங்களில்

தங்கி விட்டுக் கடைசியாகச் சீன தேசத்துக்குக் கி. பி. 1015-இல் போய்ச் சேர்ந்து, அந்நாட்டுச் சக்கரவர்த்தியால் சந்தோஷமாய் வரவேற்கப் பெற்றார்களென்று சீன தேசத்துச் சரித்திரப் புத்தகங்கள் கூறும். இதே மாதிரியாக, தூதர்கள் முதல் இராஜேந்திரன் காலத்திலும் முதற் குலோத்துங்கன் காலத்திலும் கி. பி. 1033, 1077-ஆம் வருஷங்களிலும் சீன தேசத்துக்குச் சென்றதாகத் தெரிகிறது.

இராஜராஜன் ஆட்சியின் இறுதிப் பகுதியிலும் இராஜேந்திரனுடைய அரசாட்சியின் முற்பகுதியிலும் சோழநாடும் ஸ்ரீவிஜயநாடும் நட்புப் பூண்டிருந்தனவென்பது மேற்கூறிய சூடாமணி வர்ம விஹாரத்தின் வரலாற்றால் விளங்கும் இந்நாடுகளுக்குப் பகை ஏற்பட்டு இராஜேந்திரன் ஒரு பெரும்படையை ஸ்ரீவிஜயத்துடன் யுத்தத்துக்கு அனுப்பும்படி நேர்ந்த காரணங்கள் என்னவென்று இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிந்துகொள்ள இடமில்லை. ஸ்ரீவிஜயராஜ்யம் இப்படையெழுச்சிக்குப் பின் முற்றிலும் இராஜேந்திரன் வயமாய்விட்டதா? அப்படியானால் எவ்வளவு காலம் சோழவரசர்கள் ஆதிக்கத்தின் கீழ்ப்பட்டிருந்தது ?—என்ற கேள்விகளுக்கும் தகுந்த பதிலளிக்தற்கேற்ற சான்றுகள் இல்லை. ஆனால் இராஜேந்திரன் மகன் வீரராஜேந்திரன் மட்டும் கடாரத்தரசன் ஒருவன் தன்னிடம் வந்து உதவிவேண்ட அவனுக்குத் தன் இராஜ்யத்தை மீட்டுக்கொள்ள உதவி புரிந்ததாக அவன் காலத்துச் சாஸனங்கள் கூறுகின்றன முதற் குலோத்துங்கன் காலத்தில் (1070—1120), முதல் இராஜராஜன் காலத்திற்போலவே சோழ நாடும் ஸ்ரீவிஜயநாடும் நட்புடைய இரண்டு தனி ராஜ்யங்களாகக் காணப்படுகின்றன. முற்கூறப்பட்ட நாகபட்டின விஹாரத்தைச் சார்ந்த சேப்பேடு இதற்கு ஓர் அத்தாட்சியாகும். மற்றொன்று இன்னும் வியக்கத்தக்கது: சுமாத்ராவில் சக வருஷம் 1010, அதாவது கி. பி. 1088-இல் பொறிக்கப்பட்ட ஒரு தமிழ்ச் சாஸ

னப் பகுதி. இது வெகு சிறுபகுதி; இதில் சக வருஷமும் ஆயிரத்தைஞ்ஞூற்றுவர் என்பது மட்டுமே தமிழில் வரையப்பட்டிருக்கிறது. திசைவாணிகர், திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர், அல்லது நாநாதேசிகன் என்று பலவாருகப் பேர்பெற்ற ஒரு வணிக சங்கம் அந்நாளில் பல நாடுகளில் வியாபாரம் செய்ததாக நம் நாட்டுச் சாஸனங்கள் பலவற்றுல் அறிகிருேம். அச்சாஸனங்களை யெல்லாம் இங்கே எடுத்து உரைக்கப் புகுந்தால் கட்டுரை விரியும். நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது: இந்த வணிக சங்கம் குலோத்துங்கன் காலத்தில் சுமாத்ரா தீவில் குடியேறியிருந்ததென்பதுதான். ஸ்ரீவிஜயத்து ஜனங்கள் எப்படி நாகபட்டினத்தில் விஹாரமொன்றெடுத்துக் கொண்டார்களோ அதே மாதிரி தமிழரும் சுமாத்ரா முதலிய இடங்களில் கோவில் கட்டியும் குளந்தொட்டும் இருக்கக்கூடும். மலேயாவிலும் சீன தேசத்திலும் முறையே கி. பி. 9-வது நூற்ருண்டிலும் 12-ஆவது நூற்ருண்டிலும் தமிழர்கள் கோவில் கட்டினர்கள் என்பதற்கு நல்ல ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன

—"கலை மகள்" 69. புரட்டாசி

*

தேசிய புத்தகங்கள்

கிடைக்கும் இடம்

எது

?

# வேதம் அண் கோ,

புத்தகசாலை

89, முகல் வீதி, இரங்கூன்.

---

ஜவஹரின் பர்மா விஜயம்

இரண்டாம் பதிப்பு

விலை 0—6—0

இன்றே வாருங்கள்! நன்றே செய்யும்!!

உயர்ந்த குணம்!

திருப்பரங்குன்றம்

# கே.எம்.கே.கார்த்திகேயன்

கம்பெனியின்

- சந்தனாதி
- அரைக்கீரை விதை
- குளிர் தாமரை

தைலங்கள்

மூளைக் கொதிப்பினால் உண்டாகக்கூடிய வியாதிகள் அனைத்தையும் போக்கி சுகத்தைத் தருவதில் டாக்டர்களால் அத்தாட்சி பெற்றது.

எல்லா ஸ்டோர்களிலும் கிடைக்கும்

பர்மா ஏஜண்ட்ஸ்:—

**என். பீ. அண் கோ,**

112, மூகல் வீதி, ரங்கூன்.

## "ஸ்ரீமன்மத லேகியம்"

நரம்புத் தளர்ச்சி, சக்திக் குறைவு, ஸ்வப்ன ஸ்கலிதம் முதலியவைகளைக் கண்டித்து, லேபனம், புணர்ச்சி நிர்வாஹம், காமோத்தீபனம், இந்திரியக்கட்டு, முதலியவைகளை அதிகரிக்கச் செய்கிறது.

ஒரு பாட்டில் விலை ரூ. 2—4—0.

## "அகஸ்திய சித்தர் லேகியம்"

பித்தம், பித்தச்சோகை, பித்தப்பாண்டு, பித்தக்கிறுகிறுப்பு, பசியின்மை, அஜீர்ணம், புளியேப்பம் முதலியவைகளுக்குக் கை கண்ட மருந்து.

விலை ரூ. 2—0—0.

## 'ஸ்ரீகூஷ்பாண்ட லேகியம்'

சகல உஷ்ண வியாதிகளையும் கண்டித்து, இருமல், இளைப்பு, ஈளை, எலும்புருக்கி, மூலம், மூலச்சூடு, தாபம், தாகம் காங்கை, க்ஷயம், ரத்த பித்தம், மலபந்தம் முதலிய வியாதிகளை அறவே ஒழிக்கிறது.

விலை ரூ. 2—0—0.

பர்மா சோல் ஏஜண்ட்:—

ஜி. எஸ். எஸ். என். சர்மா, பி. ஏ,

95, மோகல் வீதி, தபால்பெட்டி 689, இரங்கூன்.

லெட்டர்ப் பேப்பர்கள்
அண்டிமேண்டு பாரங்கள்
நகைச் சீட்டுகள்
உண்டியல் ரசீதுகள்
நெல்வண்டி ரசீதுகள்
பர்மா நெல் சேவாப்பத்திரங்கள்
கவர்க் கூடுகள்

—— முதலியன ——

சுத்தமாயும் அழகாயும் குறித்த காலத்தில்
கி.தானமானசார்ஜுக்கு அச்சிட்டுக்கொடுப்பவர்கள்

**செட்டியார் பிரெஸ்,**
68, மோகல் வீதி,
இரங்கூன்.

நாவல்கள், நாடகங்கள், கதைகள்,
காவியங்கள், சரித்திரங்கள்,
புராணங்கள், இதிகாசங்கள்,
பாட புத்தகங்கள்

V

கிடைக்கும் இடம்

**நவீன கதா புத்தகசாலை,**
251, மங்கமாரி வீதி,
இரங்கூன்.

## நீங்கள் பரீட்சித்துப் பார்த்தீர்களா?

வாய்வு நோய்களும், வாத நோய்களும், மலச்சிக்கல் சம்பந்தமான சகல நோய்களும், வயிற்றுக் கோளாறு களும், சூரியனைக்கண்ட பனிபோல் ஓடுகின்றன. தென் னாட்டில் கடந்த 45 ஆண்டுகளாக அனுபவத்தில் பல்லா யிரக் கணக்கான மக்களுக்கு குணமளித்த

போகநாதர் ரேடியோ

# பெருங்காய லேகியம்

பர்மாவிலும் அநேகருக்கு குணமளித்து வருகிறது.

வாதம், சூலை, சுரம், வாய்வு, வெள்ளை, வெட்டை, தாது நஷ்டம், உஷ்ணம், மேகம், கைகால் எரிவு, குதிக் கால் கெண்டைக்கால் குத்து, மூலச் சூடு, அரிசிறங்கு, ஆராதபுண், அழி கெர்ப்பம், கெர்ப்பத்தடை அரோசிகம், மலபந்தம், பித்தம், மலச்சிக்கல், அஜீரணம், வயிற்றுவலி முதலிய சகல வியாதிகளும் பஞ்சுபோல் பறந்து போய் விடும்.

இந்த லேகியம் மல சுத்தியில் பிரதானமானது. இதை ஆண் பெண் பாலர் முதல் விருத்தர் வரை எவ் வித பயமுமின்றி உபயோகிக்கலாம். யாதொரு பத்தி யமுமில்லை. இதை அனுபவிப்பவர்கள் மனோ திடத்தை யும் சரீர சுகத்தையும் ஆனந்த சாகரத்தையும் அடைவார் களென்பது நிச்சயம்.

தினம் இருவேளை காலையும் இரவும் சாப்பாட்டிற் குப் பின் கழற்சிக்காய் அளவு சாப்பிட்டுவிட்டு நித்திரை செய்யவும். 10 வயதுக் குட்பட்டவர்கள் சுண்டக்காய் அளவு சாப்பிடவும்.

அரை சேர் லேகியம் ரூ 2—0—0

தயாரிப்பவர்:——

வீரமா முனிவர் வைத்தியசாலை, சென்னை,

பர்மா சோல் ஏஜெண்ட்ஸ்:——

பர்மா நாடு அன் கோ,
201, மொகல் வீதி, ரங்கூன்.

## சந்திர விலாஸ் சிற்றுண்டிச் சாலை

66, மொகல் வீதி,

இரங்கூன்.

---

அன்புமிக்க ஐயன்மீர்,

நவீன முறையில் கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு, சுகாதார விதிப்படி சிற்றுண்டிப் பலகாரங்கள் சுத்தமான பசு நெய்யில் தயாரிக்கப் படுகின்றன.

பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை
ஸ்பேஷல் பலகாரங்கள் கிடைக்கும்.

ஸ்பெஷல் ஆர்டர்களுக்கு தகுந்த முறையில் உடனுக்குடன் உயர்ந்த முறையில் பலகாரங்கள் தயாரித்துக் கொடுக்கப்பெறும்.

ஒருமுறை விஜயம் செய்ய வேண்டுகிறோம்

---

☞ புரோப்ரைட்டர்:—

A. C. பிள்ளை.

தங்கத்தைத் தோற்கடிக்கும்

இதிற்கண்ட கோல்டன் மெட்டல் தங்க
நகைகள் சிறுமிகளையும் பெண்களையும் அழகு செய்வன




பாரத பந்து இந்து ரெஸ்டாரெண்டு,
356-358, டல்ஹெவுஸி வீதி, ரங்கூன்

பருத்தி, பட்டு நூல் உடைகளுக்குச
சிறந்த இடம்
(முகல் வீதிக்கும் 28வது வீதிக்கும்
மத்தியில் 516, டல்ஹவுஸி வீதி, மேல் வீட்டிலிருக்கும்)

# பட்டுக் களஞ்சியம்



குடும்பத்தோடு விஜயம் செய்யுங்கள்!

தி. பொ. குப்புசாமி பிள்ளை,
510, 516 டல்ஹவுஸி வீதி, இரங்கூன்.

PRINTED AT THE CHETTIARS' PRESS, RANGOON.